முருகப்பெருமான் துணை

**மகான் கழறிற்றறிவார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.05.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. அவதார ஞானியே தேசிகா
ஆற்றல்மிகு தவபலம் கொண்ட
அவதார ஆறுமுக அரங்கா
அய்யனே உன்பெருமை கூறி
2. கூறியே குரோதி தகர் திங்கள்
குறைவிலா இருபான் நவதிகதி கதிர்வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 29ம் நாள், 12.05.2024, ஞாயிற்றுக்கிழமை)
அறிவிப்பேன் துல்லிய ஆசிதனை
அச்சமற கழறிற்றறிவார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தரும நெறிகளை
ஞானதேசிகனும் கொள்கையாக்கி
நாடெங்கிலும் பரப்பி வருக
4. வருகவே கலியுக மக்களும்
வருங்காலம் பாதுகாப்பாய் மாற
கருமவினை நீங்கி கடைத்தேற
கட்டாயம் பிரணவக்குடிலை நாடி
5. நாடியே ஆசானாக அரங்கனை
ஞானம் கருதி ஏற்றுமே
தேடியே தீட்சை அடைந்துமே
தேசிகனாரின் சைவநெறி வழி
6. நெறிவழி கட்டுண்டு நடந்துமே
நீதிதர்ம பலம் குன்றாதபடி
நெறிவழி மக்களெல்லாம் நடந்து
நிலவுலகில் ஞானவழி தேறிட
7. தேறிட வரும் மக்களுக்கு
தேசிகன் வழி ஞானிகள் ஆசி
ஆறுதலாய் சர்வபலமாய் கூடி
அனைவரும் ஞானவான்கள் ஆவர்

8. ஆகவே ஞானபலம் கொண்ட
ஆற்றல் மிக்க நல்சமூகத்தை
மகான் அரங்கன் வழிநடத்தி
மாற்றமதும் செய்ய இருக்க

9. இருக்கவே சாதிஇனபேதம் கடந்து
இவ்வுலக மக்கள் தொடர்ந்து
கருத்தாக இணைந்து வர
கருணைமிக்க அரங்கன் ஆசியால்

10. ஆசியால் உலக மக்களெல்லாம்
ஆற்றல் மிக்க ஒரேகுலமாக
ஆசிவழி அகத்தியர் குலமக்களாய்
அனைவரும் ஞானவழி சிறந்து

11. சிறந்துமே மக்களை காக்கின்ற
சிறப்பான ஞானத்தலைமையை
அரங்கன் ஆசிபட உருவாக்கி
அகிலமே ஞானஆட்சிதனை அடையும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–